# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகச் சட்டம்*

---

*(2009 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, மார்ச்சு மாதம் 20 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 25.00*** ***தபாற் செலவு : ரூபா 7.50***

***2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகச் சட்டம்***

*[2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஒ. 66/2006*

***இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தினைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; புடைவை மற்றும் ஆடைத் தொழிலின் அபிவிருத்திக்கும் நிலைபெறுதகு நன்மைக்கும் ஏற்பாடு செய்வதற்கும்; உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்காக புடைவை மற்றும் உடுதுணித்தொழில் நுட்பம், முகாமை மற்றும் அதனோடு தொடர்புபட்ட துறைகளில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் செயலமர்வுகளையும் நடாத்துவதற்கும் ; வெளிநாடுகளுக்கான தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கும் ; 1984 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகச் சட்டம் மற்றும் 1984 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள் நிலையச் சட்டத்தினை நீக்குவதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்***

*1984 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகச் சட்டமானது, உடுதுணி தொழிலுக்கான பயிற்சியையும் தொழில்நுட்பச் சேவைகளையும் வழங்குவதற்கான உடுதுணி தொழிற்பயிற்சி நிறுவகம் தாபிக்கப்பட்டிருப்பதாதலாலும் :* *பாயிரம்.*

*அத்துடன், 1984 ஆம் ஆண்டின் 4 ஆம் புடைவைத் தொழிற் பயிற்சி சேவைகள் நிலையச் சட்டமானது புடைவைத்தொழிலுக்குப் பயிற்சி, ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்கு புடைவைத் தொழிற்பயிற்சி சேவை நிலையங்கள் தாபிக்கப்பட்டிருப்பதாதலாலும் :*

*அத்துடன் உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகத்தினாலும் புடைவைத் தொழிற்பயிற்சி சேவைகள் நிலையத்தினாலும் பயன் படுத்தப்பட்ட பெருமளவான வளங்களும் சாதனமும் சொல்லப்பட்ட நிறுவனங்களுக்கிடையில் பகிரங்கப்படுகின்றதாதலாலும் நிறுவனங்கள் இரண்டும் புடைவை மற்றும் ஆடைத்தொழிலுக்கான அதே போன்ற சேவையை தற்போது வழங்கிக்கொண்டிருப்பதாதலாலும் :*

*அத்துடன், சொல்லப்பட்ட உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகம் மற்றும் சொல்லப்பட்ட புடைவைத் தொழிற்பயிற்சி சேவைகள் நிலையத்தை இணைப்பதன்மூலம் சொல்லப்பட்ட*

2-PL 003129 -1,150 (2008/08)

இரண்டு நிறுவனங் களின் பராமரிப்பு செயற்பாட்டுச் செலவைக் குறைப்பதும் அத்துடன் ஆனால் இவ்விரண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட சேவைகளை இதனகத்துத் தாபிக்கப்படும் இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின் இவ்விரு நிறுவ கங்களை இணைப்பது அவசியமாகவந்துள்ளதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக : -

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம் 2009 ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகச் சட்டமென எடுத்துக்காட்டப்படலா மென்பதுடன் இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட திகதி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். இப்பிரிவின் ஏற்பாடுகள், எத்திகதியில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்படுகின்றதோ அத்திகதியில் அரசியலமைப்பின் 80 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் நியதிகளின்படி வலுவுக்கு வருதல் வேண்டும்.

## பாகம் I

### இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தினைத் தாபித்தல்

இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தினை தாபித்தல்.

**2.** (இதனகத்துப்பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பீடு செய்யப் படும்) இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகம் என அழைக் கப்படும் நிறுவகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இது இப்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறாவழியுரிமையையும், ஒரு பொது இலச்சினையையும் கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் அதன் கூட்டிணைக் கப்பட்ட பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

ஆளுநர் சபையின் அமைப்பு.

**3.** (1) நிறுவகமானது பின்வருவோரைக் கொண்ட (இது இதன கத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளுநர் சபையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :-

(i) புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின்

அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சின் வேறு எவரேனும் அலுவலர், இவரே சபையின் தவிசாளராதல் வேண்டும் ;

(ii) தொழில் முயற்சி, அபிவிருத்தி மற்றும் முதலீட்டு மேம்படுத்துகை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சிலிருந்து அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ;

(iii) கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சிலிருந்து அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ;

(iv) உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சிலிருந்து அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ; அத்துடன்

(v) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சிலிருந்து அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் உறுப்பினர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும் : $

(i) புடைவை உற்பத்தித் தொழில் மற்றும் புடைவை ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களிடையே இருந்து இரண்டு ஆட்கள் ;

(ii) 1982 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கூட்டு ஆடை உற்பத்திக் கழகங்கள் ஒன்றியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று ஆட்கள் ; அத்துடன்

(iii) கல்விசார் கற்கைநெறிகள் அல்லது புடைவைத் தொழில் பயிற்சி அல்லது உடுதுணித் தொழில் நுட்பம் தொடர்புபட்ட நடாத்துவதில் ஈடுபட்டுள்ள கல்விசார் அல்லது உயர்தொழில்சார் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரண்டு ஆட்கள்.

(2) சபையானது நிறுவகத்தின் அலுவல்களை நிர்வகிப்பதற்கு பொறுப்புடையனவாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் சபை உறுப்பினர்களின் பதவிக்காலம், உறுப்பினர்களுக்கு செலுத்தப்படற்பாலதான ஊதியம், சபையின் கூட்டங்கள் மற்றும் சபையின் இலச்சினை தொடர்பில் பயனுடையதாதல் வேண்டும்.

நிறுவகத்தின் குறிக்கோள்கள்.

**4**. எந்தக் குறிக்கோள்களுக்காக நிறுவகம் தாபிக்கப்பட்டதோ அந்தக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் :-

(அ) புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிலிலுள்ளவர்களுக்கு பட்டப்பின்படிப்பு, பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதலும் டிப்ளோமா மட்டக் கல்வி, பயிற்சி ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப சேவைகளை வழங்குதலும் ;

(ஆ) புடைவை மற்றும் உடுதுணித் தொழில்நுட்பம், முகாமை மற்றும் வேறு தொடர்புபட்ட துறைகளில் தேசிய நியமங்களைத் தாபித்தலும் ; அத்துடன் அவை தொடர்பில் சான்றிதழ்கள் வழங்குதலும் ;

(இ) புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில்பற்றிய தேசிய கொள்கை ஒன்றை வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு உதவுதல் ;

(ஈ) வெளிநாட்டு நிறுவனங்களுடனும், கைத்தொழில்களுடனும் மற்றும் ஆய்வுகூடங்களுடனும் இணைத்தும் தராதர அங்கீகார ஆய்வுகூட சேவைகளை வழங்குதலும்; அத்துடன் அவை தொடர்பான உயர்தராதரத்தைப் பேணுகின்ற கற்கை நெறிகளை நடாத்துதலும் ;

(உ) புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில் துறையில் பட்டப்படிப்புகள், பட்டப்பின்படிப்புகள், டிப்ளோமாக்

கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நோக்குடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடனும் இணைப்பை உருவாக்குதல்;

(ஊ) அரச நிறுவனங்கள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கல்விசார் ஒழுங்கமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் நிறுவனங்களின் ஒத்திசைவுடன் புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிலில் ஆராய்ச்சி களை நிறைவேற்றுதலும் உற்பத்தி அபிவிருத்தியை மேம்படுத்துதலும் ;

(எ) புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில் துறைகளில் தொடர்புபட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் அத்துடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்க ளுக்கும் கட்டணம் விதிக்கின்ற அடிப்படை ஒன்றின்மீது பரிசோதனை மற்றும் வேறு தொடர்புபட்ட தொழில்நுட்ப ஆலோசனைச் சேவை களை முனைவுசெய்தல் ;

(ஏ) சந்தை ஆய்வுகள் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக் கற்கைகள் வேலைத்திட்டப் பகுப்பாய்வுகள் அத்துடன் புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் பொறி மற்றும் இயந்திரம் மீதான பெறுமான மதிப்பீடுகள் ;

(ஐ) புடைவை தொழில் மற்றும் ஆடைக் கைத்தொழில் தொடர்பான உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் தொழில்நுட்ப தகவல் தொடர்பிலான அத்தகைய கைத்தொழில் மீதான தரவுத் தளம் ஒன்றைப் பராமரித் தல் ; அத்துடன்

(ஒ) புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு சர்வதேச, தேசிய மற்றும் கம்பெனி இணங்கி யொழுகும் முறைமை நியமங்கள் மீதான ஒத்திசைவுச் சான்றிதழ்களை வழங்குதல்.

நிறுவகத்தின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.

**5**. சபையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிர்வகிப்பதில் பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோ கித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :-

(அ) புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிலில் எல்லா அம்சங்களிலும் ஆராய்ச்சியை நடாத்துதல், அவற்றிற்கு உதவுதல், அவற்றை ஒருங்கிணைத்தல் அத்துடன் ஊக்குவித்தல் ;

(ஆ) தராதர அங்கீகார சேவைகளுக்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் ஆய்வுகூடங்களுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ளுதல் மற்றும் பரிசோதனை சேவைகளுக்காக நியமங்களைத் தாபித் தல் ;

(இ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழங்கள் மற்றும் வேறு உயர்தொழில் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல், புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில் சம்பந்தப்பட்ட அம்சங்களில் கல்வி மற்றும் பயிற்சியை ஏற்பாடு செய்தல் ;

(ஈ) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு தேவைப்படுத்தப்பட்ட பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் சாதனத்தை இறக்குமதிசெய்தல் ; அத்துடன் நிறுவகத்தின் அலுவல் களை வினைத்திறமையாக நடாத்துவதற்கு தேவைப் படுத்தப்பட்ட சாதனம், நிதியங்கள், ஆளணி மற்றும் ஏதேனும் வேறு உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் ;

(உ) புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில் தொடர்பாக இலங்கையினுள் அல்லது வெளியே மாநாடுகளையும் வேலைக் களங்களையும் கருத்தரங்குகளையும் ஊக்கித் தொடக்கிவைத்தலும் அவற்றை நடாத்துதலும் ; அத்து டன் அவை தொடர்பான சஞ்சிகைகள் மற்றும் பருவ கால இதழ்களை வெளியிடுதலும் ;

(ஊ) புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிலுடன் தொடர் பான வளப்பயிற்சி நிலையங்களையும் கொள்ளுதலும், தாபித்தலும் நிறுவுதலும் அத்துடன் செயற்படுத்துதலும் முன்னோடிக் கருத்திட்டங்களை நிறைவேற்றுதலும் ;

(எ) நிறுவகத்தால் அளிக்கப்படும் எல்லாப் பயிற்சிக் காகவும் கட்டணங்களையும் விதிப்பனவுகளையும் அறவிடுதல் ;

(ஏ) அவசியமாக வரக்கூடியவாறான நிறுவகத்தின் அலுவல்களை நிர்வகிப்பதற்கு இயைபான விடயங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(ஐ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தன்மைத்தான எம்முறையிலும் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது குத்தகைக்கு விடுதல் அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது வாடகைக்கு விடுதல், ஈடுவைத்தல், அடைவு வைத்தல், விற்றல் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தல் ;

(ஒ) சபை அவசியமெனக் கருதக்கூடியவாறான அதன் ஏதேனும் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை சபையின் எவரேனும் உறுப்பினருக்கு, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எவரேனும் பணிப்பாளருக்கு அல்லது வேறு ஊழியருக்கு கையளித்தல் ;

(ஓ) சபையின் அபிப்பிராயத்தில், நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையான ஏதேனும் நுண்ணாய்வுகளை மேற்கொண்டு தரவைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காகவும், புத்தகங்களையும் ஆவணங்களையும் சோதனை செய்வதற்காகவும் அவற்றிலிருந்து பிரதிகளை அல்லது பொழிப்புகளை எடுப்பதற்காகவும் ஏதேனும் காணிக்கு அல்லது வளவுக்கு சொந்தக்காரர், குடியிருப்பாளர் அல்லது அத்தகைய வளவு அல்லது காணிக்குப் பொறுப்பான ஆளின் சம்மதத்துடன் அத்தகைய காணியினுள் அல்லது வளவினுள் ஏதேனும் நியாயமான காலத்தினுள் பிரவேசித்தல் ; அத்துடன்

(ஔ) சபையின் அபிப்பிராயப்படி, நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான, உசிதமான அல்லது இடைநேர்விளைவானவையாக வேறு அத்தகைய எல்லாக் காரியங்களையும் செய்தல்.

சபையானது அரசாங்கத்தின் பொதுவான கொள்கைக்கு இணங்க அதனுடைய தத்துவங்களைப் பிரயோகித்தலும் அதன் கடமைகளை நிறை வேற்றுதலும் மற்றும் பணிகளைப் புரிதலும் வேண்டும்.

**6**. சபையானது அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், அதன் கடமைகளை நிறைவேற்றுவதிலும் மற்றும் பணிகளைப் புரிகையிலும் புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில் தொடர்பான அரசாங்கத்தின் பொதுக்கொள்கைக்கும், அத்தகைய கொள்கையினை அமுல்படுத்துவது தொடர்பாக அமைச்சரால் காலத்திற்குக் காலம் வழங்கப்படக்கூடிய ஏதேனும் பொதுவான அல்லது விசேட பணிப்புகளுக்கும் இணங்க இணங்கியொழுகுதல் வேண்டும்.

கையளித்தல்.

**7**. (1) சபையானது, அதன் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளினுள் எதனையும் சபையின் தவிசாளருக்கு அல்லது சபையின் வேறு எவரேனும் உறுப்பினருக்கு அல்லது நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது வேறு எவரேனும் ஊழியருக்கு கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையின் தத்துவம், கடமை அல்லது பணி எதுவும் கையளிக்கப்பட்டுள்ளவரான எவரேனும் ஆள் அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவத்தையும், கடமையையும் பணியையும் சபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கு அமைவாக, பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

## பாகம் II

### நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியையும் பணிப்பாளர்களையும், பணியாட்டொகுதியையும் நியமித்தல்

நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமை யதிபதியும், பணிப்பாளர் களும்.

**8**. (1) அமைச்சரானவர், சபையுடனான கலந்தாலோசனையுடன் (இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை நியமித்தல் வேண்டும். அதன் பிரதம நிருவாக அலுவலராதல் வேண்டும். தொழிலின் நியதிகளும் நிபந்தனைகளும் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு செலுத்தப்படற்

பாலதான ஊதியம் என்பன நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் தீர்மானிக் கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் பொதுவான பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கமைய நிறுவகத்தின் அலுவல்க ளின் பணிப்புடன் பொறுப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் மேலும் சபையினால் அவருக்கு கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(3) சபையானது, நிறுவகத்தின் பணிப்பாளராக இரண்டு ஆட்களை நியமித்தல் வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் நிறுவகத்தின் தனியான பிரிவுகளின் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள், பணிப்பாளர் தலைமையதியதியின் மேற்பார்வைக்கு அமைய, அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட பிரிவுகள் தொடர்பில் தங்களது கடமைகளையும் பணிகளையும், புரிதலும் நிறைவேற்றுத லும் வேண்டும்.

(5) விடயத்திற்கேற்றவாறு அமைச்சர் அல்லது சபையானது விடயத்திற்கேற்றவாறு (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தலைமையதிபதியை அல்லது பணிப்பாளரை குறித்தொதுக்கப் பட்ட காரணங்களுக்காக பதவியிலிருந்து அகற்றலாம்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது இரண்டு பணிப்பாளரில் எவரேனும் ஒருவரின் பதவியானது இறப்பின் மேல், ஓய்வுபெறுவதன்மேல், (5) ஆம் உட்பிரிவின்கீழான பதவி யகற்றுவதன்மேல் அல்லது அதன்பொருட்டு விடயத்திற்கேற்ற வாறு அமைச்சருக்கு அல்லது சபைக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் இராஜினாமாச் செய்வதன்மேல் பதவிவறி தாதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது பணிப்பாளர் களில் எவரேனும் ஒருவரின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் எழுகின்றவிடத்து, விடயத்திற்கேற்றவாறு அமைச்சர் அல்லது

சபையானது, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமனம் ஒன்று ஆக்கப்படும் வரை விடயத்திற்கேற்றவாறு பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது பணிப்பாளர் பதவியின் கடமைகளைப் புரிவதற்கும், பணிகளை நிறைவேற்றுவதற்கும் சபையின் உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம்.

நிறுவகத்தின் பணியாட் டொகுதி.

**9**. இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்படக்கூடியதும் ஏதேனும் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது அதனது தத்துவங்களையும், பணிகளையும் மற்றும் கடமைகளையும் வினைத்திறனாக பிரயோகிக்கவும், நிறைவேற்றவும் மற்றும் புரியவும் அது அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவல்களையும் ஊழியர்களையும் நியமிக்கலாம், என்பதுடன் மேலும் :-

(அ) நிறுவகத்தின் பணிப்பாளர்களுக்கு, அலுவல்களுக்கு மற்றும் வேறு ஊழியர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான சம்பளங்களையும் வேறு ஊதியத்தையும் தீர்மானிக்கலாம் ;

(ஆ) நிறுவகத்தின் பணிப்பாளர்களின், அலுவலர்களின் மற்றும் வேறு ஊழியர்களின் அகற்றுதல் உள்ளடங்கலாக ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம்;

(இ) நிறுவகத்தின் பணிப்பாளர்களின், அலுவலர்களின் மற்றும் வேறு ஊழியர்களின் சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானிக்கலாம்.

நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

**10**. (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பகிரங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்தோடு, சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்கசேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்கசேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடனும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்கு சேவையாற்ற உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை சபை வேலைக்கமர்த்துமிடத்து, அந்நிறுவனத்துக்கான அந்த ஆளின் சேவைக்காலம் எதுவும் அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு அவரால் ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) சபையின் வேண்டுகோளின் பேரில் உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்தோடும், உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவின் அல்லது உள்ளூரதிகாரசபையின் சம்மதத்தோடும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு சபையினால் அதேபோன்ற சம்மதத்தோடு தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது விடயத்திற்கேற்றவாறு உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவின் அல்லது உள்ளூரதிகாரசபையின் நிறுவனத்தினால் உடன்பட்டுக்கொள்ளக்கூடிய ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாய நிதிய உரிமைகள் உட்பட அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) சபையின் வேண்டுகோளின்பேரில் கூட்டுத்தாபன மொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் சேவையாளரினதும் அத்துடன் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளுநர் சபையினதும் சம்மதத்தோடு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு சபையினால் அதேபோன்ற சம்மதத்தோடு தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது சபையும் அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளுநர் சபையும் உடன்பட்டுக்கொள்ளக்கூடியனவான ஓய்வூதிய உரிமைகளும் சகாய நிதிய உரிமைகளும் உட்பட, அத்தகைய நியதிநிபந்தனைகள் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தமாக நியமிக்கப்படலாம்.

(7) எவரேனும் ஆள் இப்பிரிவின் (5) ஆம் அல்லது (6) ஆம் உட்பிரிவுகளின் கீழ் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்ற அதே ஒழுக்காற்றுக்கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் III

### நிதி

நிறுவகத்தின் நிதியம்.

**11.** (1) நிறுவகமானது அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கு -

(அ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காக பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) பன்னிரண்டாம் பிரிவின்கீழ் தாபிக்கப்படும் பணியாட்டொகுதி அபிவிருத்தி நிதியத்திற்கான தொகையொன்றினை வரவு வைத்த பின்னர் இச்சட்டத்தின்கீழ் அதனுடைய தத்துவங்களையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதில், நிறைவேற்றுவதில் மற்றும் புரிவதில் நிறுவகத்தினால் பெறப்பட்ட பணத்திலிருந்து எஞ்சியிருக்கின்ற மீதித்தொகை ;

(இ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் போன்ற வழிமூலம் நிறுவகத்தினால் பெறப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகையும் ; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நிதியத்திற்கு மாற்றப்படு கின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் நிறுவகம் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதனால் உறப்பட்ட செலவினம் எல்லாவற்றையும் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுவதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*பணியாட்டொகுதி அபிவிருத்தி நிதியம்.*

**12.** (1) சபையானது நிறுவகத்தின் பணியாட்டொகுதியின் நுட்பத்தையும் அறிவையும் முன்னேற்றும் நோக்கத்திற்காக பணியாட்டொகுதி அபிவிருத்தி நிதியம் ஒன்றைத் தாபிக்கலாம்.

(2) சபை தீர்மானிக்கப்படவேண்டியவாறான இச்சட்டத்தின் கீழ் நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும், கடமைகளை நிறைவேற்றுவதிலும், பணிகளைப் புரிவதிலும் நிறுவகத்தினால் பெறப்படும் வருமானத்தின் அத்தகைய நூற்றுவீதம் பணியாட்டொகுதி அபிவிருத்தி நிதியத்திற்கு ஆண்டுதோறும் செலுத்தப்படல் வேண்டும்.

(3) சபையானது பணியாட்டொகுதி அபிவிருத்தி நிதியத்தின் முறையான நிர்வாகத்திற்கும் பராமரிப்பிற்கும் பொறுப்புடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நிதியத்தை ஆண்டுதோறும் கணக்காய்வுசெய்வித்தலும் வேண்டும். அத்துடன் கணக்குகளை கணக்காய்வு செய்வது தொடர்பாக அரசியல

மைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அத்தகைய கணக்காய்வு தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

*நிறுவகத்தின் கடன்பெறும் தத்துவங்கள்.*

**13.** நிறுவகமானது, அமைச்சரினதும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன், நிறுவகம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் வினைத்திறனாக பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்கும், தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை மேலதிகப்பற்று என்ற வகையாக அல்லது வேறுவகையாகக் கடன்பெறலாம் அல்லது கடன் நியதிகளின்மீது பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளலாம்:

ஆயின், இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தினால் கடனாகப் பெறப்பட்ட ஏதேனும் தொகை தொடர்பில் நிலுவையாகவுள்ள மொத்தத்தொகை, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய தொகையை ஏதேனும் காலத்தில் விஞ்சுதலாகாது.

*நிறுவகத்தின் நிதியாண்டும் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலும்.*

**14.** (1) நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) சபையானது, நிறுவகத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய சரியான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்புடைமை.*

**15.** 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் நிறுவகத்தின் நிதிக்கட்டுப்பாட்டுக்கும் கணக்குகளுக்கும் அவை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**16.** சபையானது ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் அவ்வாண்டு காலப்பகுதியின்போது அதனது செயற்பாடுகள் பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிடுதல் வேண்டும் என்பதுடன் அந்த அறிக்கையானது அமைச்சரது அங்கீகாரத்திற்கென அமைச்சருக்கு சமர்ப்பித்தலும் வேண்டும். அமைச்சரினால் அங்கீகாரம் பெறப்படுவதன்மேல், அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

*சபையானது அதனது செயற்பாடுகள் பற்றிய ஆண்டறிக்கை ஒன்றைத் தயாரித்தல்.*

## பாகம் IV

### பொது

**17.** (1) இச்சட்டத்தின்கீழ் சபையின் தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறை வேற்றுகின்ற நோக்கத்திற்கென ஏதேனும் பரிசோதனை புலனாய்வை கொண்டுநடாத்துகின்ற அல்லது ஏதேனும் தரவுகளை பதிவுசெய்கின்ற நோக்கத்திற்கு ஏதேனும் கட்டடம் அல்லது வளவுகளுள் நியாயமான எல்லா நேரத்திலும் பிரவேசிப் பதற்கு சபையினால் அதன் சார்பில் எழுத்தில் விசேடமாக அதிகாரமளிக்கப்படும் நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல் லது வேறு தொழிலாளருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

*கட்டடம் மற்றும் வளவினுள் பிரவேசமும் சோதனை செய்தலும்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் சோதனையை, புலனாய்வை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அல்லது ஏதேனும் தரவினைப் பதிவுசெய்யும் நோக்கத்திற்காக கட்டடத்தினுள் அல்லது வளவினுள் நுழைவதற்கான சம்மதம் விடயத்திற் கேற்றவாறு அத்தகைய கட்டடம் அல்லது வளவுகளுக்குப் பொறுப்பாயுள்ள சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் அல் லது ஆளிடமிருந்து பெறப்பட வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பெறப்படவேண்டுமென தேவைப்படுத்தப்படும் சம்மதம் நியாயமற்ற முறையில் மறுக்கப்படுமிடத்து சபையானது விடயத்திற்கேற்றவாறு அத்தகைய கட்டடம் அல்லது வளவுகள் அமைந்துள்ள இடப்பரப்பில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதவானிடமிருந்து விடயத்திற்கேற்றவாறு அத்தகைய கட்டடம் அல்லது வளவுகளுள் பிரவேசிக்கவும் தேவைப்படும் பரிசோதனை, புலனாய்வை

நிறைவேற்ற அல்லது தரவுகளைப் பதிவுசெய்ய அதில் பெயரிடப் படும் அலுவலரை அதிகாரமளிக்கின்ற தேடுதல் ஆணையைப் பெற்றுக்கொள்ளலாம்.

(4) இப்பிரிவின்கீழ் நிறுவகத்தின் அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலரின் அல்லது தொழிலாளரின் கடமைகளை நிறைவேற்றுவதில் நிறுவகத்தின் அவ் அலுவலரை அல்லது ஊழியரைத் தடுக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தகவலை தேவைப்படுத்து வதற்கான தத்துவம்.

**18.** (1) இச்சட்டத்தின்கீழான எவையேனும் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் நிறுவகத்தை இயலச்செய்யும் நோக்கத் துக்காக, பணிப்பாளர் தலைமையதிபதி, பணிப்பாளர் ஒருவர் அல்லது எவரேனும் அலுவலர் அல்லது அதன்பொருட்டு சபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஊழியர், புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில் தொடர்பானதும் மற்றும் வழங்கப் பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டியதான அவருக்குத் தெரிந்திருக்கின்ற ஏதேனும் விடயம் பற்றிய தகவலை கொடுத்துதவுவதற்கு அல்லது அறிவித்தலில் குறித்துரைக் கப்படவேண்டியதான அத்தகைய காலத்தினுள் அதனில் குறித்துரைக்கப்பட வேண்டியதான ஏதேனும் ஆவணத்தைக் காண்பிப்பதற்கு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் ஒன்றின்மூலம் ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு அல்லது ஏதேனும் ஆவணத்தை முன்வைக்குமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ள எவரேனும் ஆள், ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய தகவலை வெளிப்படுத்துவதிலிருந்து அத்தகைய ஆள் தடைசெய்யப்பட்டி ருக்குமிடத்து அல்லது அத்தகைய தகவலை அவர் அறிந்திராத விடத்து அல்லது அத்தகைய தகவல் உடைமையில் இல்லாத விடத்து தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அத்தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுவது அவரதுகடமையாதல் வேண்டும்.

(3) முதலாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவது கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தின் உள்ளடக்கங் கள், விடயத்திற்கேற்றவாறு அத்தகைய தகவலைக் கொடுத்துதவு கின்ற அல்லது அத்தகைய ஆவணத்தை சமர்ப்பிக்கின்ற ஆளின்

*சம்மதமுடனன்றி அல்லது இச்சட்டத்தின்கீழ் அதனது தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகம், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலின் செயல்நெறியின்போதன்றி எவரேனும் வேறு ஆளுக்கு சபையினால் வெளியிடப்படுதலோ அறிவிக்கப்படுதலோ ஆகாது.*

*அமைச்சரின் பணிப்புரைகள்.*

***19**. அமைச்சரானவர், நிறுவகத்தினுடைய தத்துவங்களைப் பிரயோகித்தல், கடமைகளைப் புரிதல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக சபைக்கு எழுத்தில் அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புரைகளைக் காலத்திற்குக்காலம் வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புரைக்கு பயன்கொடுத்தல் சபையின் கடமையாதலும் வேண்டும்.*

*நிறுவனத்திற்கான காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.*

***20**. (1) நிறுவகத்தின் நோக்கங்கள் எவற்றுக்காகவும் ஏதேனும் அசைவற்ற ஆதனம் நிறுவகத்திற்குக் கொள்ளப்படவேண்டுமெனத் தேவைப்படுமிடத்தும், அமைச்சர் உத்தேசிக்கப்பட்ட கொள்ளுதலை அங்கீகரிக்கின்றவிடத்தும் எந்த நோக்கத்திற்காக அத்தகைய அசைவற்ற ஆதனம் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த நோக்கத்திற்கு (460 ஆம் அத்தியாயமான) காணிகொள்ளுதற் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பகிரங்க நோக்கம் ஒன்றிருப்பதாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க அச்சட்டத்தின்கீழ் நிறுவகத்திற்குக்கொள்ளப்படலாம் ; அத்துடன் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய கொள்ளுதல் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.*

*(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நிறுவகத்திற்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுவதற்கு செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தொகை, நிறுவகத்தினால் செலுத்தப்படுவதாக இருத்தல் வேண்டும்.*

*குடியரசின் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான ஆதனம் நிறுவனத்திற்கு கிடைக்கக் கூடியதாகச் செய்யப்படுதல்.*

***21**. (1) அரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் நிறுவகத்தின் ஏதேனும் நோக்கத்திற்குத் தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய நோக்கமானது, (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தைச் சிறப்பு மானியமாக அல்லது குத்தகையாக வழங்கக்கூடிய நோக்கமொன்றெனக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் சிறப்பு மானியமாக*

அல்லது குத்தகையாக நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட அத்தகைய ஆதனத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஆதனம் எதுவும் நிறுவகத்தின் ஏதேனும் நோக்கத்திற்குத் தேவைப்படுகின்றவிடத்து, அமைச்சரானவர் அத்தகைய ஆதனத்தின்மீது கட்டுப்பாட்டைக்கொண்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் நிறுவகத்திற்கு மாற்றி அதற்கு உரித்தாக்கலாம்.

உறப்பட்ட செலவினங்கள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**22.** இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புகளின்மேல், நிறுவகத்தினால் அல்லது சபையுறுப்பின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியரினால் செய்யப்படுகின்ற ஏதேனும் செயல் தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் நிறுவனம் அல்லது அத்தகைய ஆளுக்கெதிராக கொண்டு வரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அத்தகைய செயல், நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென அந்நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அல்லது வழக்கு நடவடிக்கையில் நிறுவகத்தினால் அல்லது அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு நிறுவனத்தினால் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் நிறுவனத்தினால் இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் அத்தகைய எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட ஏதேனும் செலவு நிறுவகத்தின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

ஆணையெதுவும் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக வழங்கப் படலாகாது.

**23.** ஆணையெதுவும் நிறுவகத்திற்கெதிராகக் கொண்டுவரப் படும் ஏதேனும் வழக்கில், சபையின் ஆளுக்கெதிராக அல்லது ஆதனத்திற்கெதிராக அல்லது எவரேனும் உறுப்பினருக் கெதிராக, நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எதிராக, பணிப்பாளர் ஒருவருக்கு எதிராக அல்லது எவரேனும் அலுவலருக்கு எதிராக அல்லது ஊழியருக்கு எதிராக வழங்கப்படலாகாது.

தவறுகள்.

**24.**(அ) இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுவதற்கு அல்லது ஏதேனும் ஆவணத்தைச் சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தப் பட்டபோது அவ்வாறு செய்யத்தவறுகின்ற ;

(ஆ) அவ்வாளினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலில் ஏதேனும் பொய்யான கூற்றை தெரிந்து கொண்டு செய்கின்ற ;

(இ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் ஏதேனும் ஏற்பாடுகளை மீறிச்செயலாற்றுகின்ற,

ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

*நிறுவகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாதல்.*

**25.** நிறுவகமானது (27 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*நிறுவகத்தின் உறுப்பினர்கள், பணிப்பாளர் தலைமையதிபதி பணிப்பாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.*

**26.** சபையானது எல்லா உறுப்பினர்களும் நிறுவகத்தினது பணிப்பாளர் தலைமையதிபதி, பணிப்பாளர்கள் மற்றும் எல்லா அலுவலர்கள் அத்துடன் ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*விதிகள்.*

**27.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது எந்த எல்லாக் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் விதிகளை ஆக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டிருக்கின்றதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(2) சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படலும் வேண்டும். அத்துடன் அதனில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**29.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"உள்ளூர் அதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும், நிறைவேற்றப்படும் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுக்கு நேரொத்த அல்லது அவற்றைப் போன்ற தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிப்பதற்கு புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"மாகாணசபை" என்பது அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு மாகாணசபை எனப் பொருள்படும் ;

"புடைவை மற்றும் ஆடைக்கைத்தொழில்" என்பது பாதணி அத்துடன் புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழிலுடன் இணைக்கப்பட்ட அல்லது சம்பந்தப்படுத்தப்பட்ட அல்லது தொடர்புபடுத்தப்பட்ட வேறு கைத்தொழிலை உள்ளடக்குகின்றது.

# பாகம் V

## நீக்குதலும் பேணல்களும்

**30.** (1) 1984 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகச் சட்டம் மற்றும் 1984 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

*1984 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தினையும் 1984 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினையும் நீக்குதல்.*

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சட்டங்களை நீக்குதல் எதுஎப்படியிருப்பினும் -

(அ) நியமிக்கப்பட்ட திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று, 1984 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகச் சட்டத்தின் 22 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட நிதியத்திலும் 1984 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, புடைவைத் தொழிற்பயிற்சி சேவைகள் நிலையச் சட்டத்தின் 23 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட நிதியத்திலும் எஞ்சியிருக்கின்ற ஏதேனும் பணங்கள் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து பயனுறுவதுடன் இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகத்தின் நிதியத்திற்கு மாற்றப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவனம் மற்றும் புடைவைத் தொழிற்பயிற்சி சேவைகள் நிலையம் ஆகியவற்றினால், ஆகியவற்றுடன் அல்லது ஆகியன சார்பில் உறப்பட்ட எல்லாக் கடன்களும், கடப்பாடுகளும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் செய்துகொள்வதற்கு தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்களும் காரியங்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதுடன் நிறுவகத்தினால் அல்லது அதனுடன் அல்லது அதற்காக உறப்பட்டுள்ளனவாக, எழுதி நிறைவேற்றப்பட்டுள்ளனவாக, செய்துகொள்ளப்பட்டுள்ளனவாக அல்லது செய்துகொள்ளப்படுவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனவாக கருதப்படுதல் வேண்டும்;

(இ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று தொழிலில் இருக்கின்றவரும் நிருவகித்தல் தொழில் பெறுவதற்கு முனையப்படுகின்றவர்களுமான உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகத்தினதும் புடைவைத் தொழிற்பயிற்சி நிறுவகச் சட்டத்தின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் ; அத்துடன் –

(i) அத்தகைய தொழில்முனைவை ஏற்றுக்கொள்கின்றவர்களும், நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து பயனுறுவதாக அத்தகைய முனைவினை ஏற்றுக் கொள்ளும் திகதியன்று அவர்களுக்கு ஏற்புடையதாகவிருந்த தொழிலின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தவிர அனுகூலம் குறைந்தனவாக இராத அத்தகைய நியதிகள் நிபந்தனைகள்மீது நிறுவகத்தில் தொழிலுக்கமர்த் தப்படல் வேண்டும் ;

(ii) அத்தகைய தொழில் முனைவை ஏற்றுக்கொள்ளாதிருக்கின்றவர்களும், நியமிக்கப்பட்ட திகதியிருந்து பயனுறுவதாக தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஓய்வூதிய நன்மைகள் கொடுப்பனவுக்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) விடயத்திற்கேற்றவாறு உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகம் அல்லது புடைவைத் தொழிற்பயிற்சி சேவைகள், நிலையம் ஆகியவற்றினால் அல்லது ஆகியவற்றுக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையால் தொடுக்கப்பட்டிருக்கக்கூடியவையும் மற்றும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அத்தகைய நீதிமன்றம் நியாயசபையின் முன்னர் முடிவுறாதிருக்கின்றவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், குற்றவழக்குகளும், மேன்முறையீடுகளும் அல்லது வேறு சட்டநடவடிக்கைகளும் நியமிக்கப்பட்ட திகதியிருந்து பயனுறுவதாக நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்திற்கெதிராக தொடுக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க தொடரவும்படலாம் ;

(உ) விடயத்திற்கேற்றவாறு உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகம் அல்லது புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள், நிலையம் ஆகியவற்றுக்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராக தகுதிவாய்ந்த நீதிமன்ற மொன்றினால் அல்லது நியாயசபையொன்றினால் செய்துகொள்ளப்பட்டதும் அல்லது ஆக்கப்பட்டதும் அத்துடன் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று திருப்திப்படாதவையுமான எல்லாத் தீர்வைகளும், கட்டளைகளும் தீர்ப்புக்களும் நியமிக்கப் பட்ட திகதியிருந்து பயனுறுவதாக நிறுவகத்திற்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராக செய்து கொள்ளப் பட்டுள்ளனவாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுப்படுத்தப்படலும் வேண்டும் ;

(ஊ) விடயத்திற்கேற்றவாறு உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகம் அல்லது புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள், நிலையம் என்பவற்றிற்கு உரித்தாக்கப்பட் டிருந்த அல்லது அவற்றால் சட்டப்படி கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட அல்லது அதற்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருந்த அல்லது அவற்றால் கையுதிர்ப்பதற்கென வைக்கப்பட்டிருந்த அல்லது வேறு எவ்வகையாகவேனும் அவற்றிற்கு மாற்றப்பட்டிருந்த அத்துடன் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அவற்றின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதுடன், அத்தேதியில் உள்ள வாறு அவற்றோடு தொடர்புள்ள, அவற்றோடு இணைந் துள்ள அல்லது அவற்றுக்கு ஏற்புடையனவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய நிறுவனத் திற்கு உரித்தாதல் வேண்டும் ; அத்துடன்

(எ) உடுதுணித் தொழிற்பயிற்சி நிறுவகத்தின் ஆளுநர்கள் சபையினாலும் புடைவைத் தொழிற்பயிற்சி, சேவைகள் நிலையத்தின் ஆளுநர்கள் சபையினாலும் ஆக்கப்பட்ட தும், நியமிக்கப்பட்ட திகதியன்று வலுவிலுள்ளதும் அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதன வாக இல்லாதிருக்கின்றதுமான விதி ஒவ்வொன்றும்

அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகள் அல்லது விதிகள் நியமிக்கப்பட்ட திகதியிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

**அட்டவணை** [பிரிவு 3(3)]

**சபையின் உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள்**

1. ஆளொருவர் -

(அ) அவர் பாராளுமன்றத்தின் அல்லது மாகாணசபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பினராகவிருத்தல் அல்லது உறுப்பினராகவந்தால் ;

(ஆ) நிறுவகத்தினால் அல்லது அதன் சார்பில் செய்யப்படும் ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமை அல்லது நன்மையை நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருக்கின்ற அல்லது அனுபவிக்கின்ற ;

(இ) அவர் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்;

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்குறோத்தானவர் எனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளவரும் கடனிறுக்க வகையற்ற தன்மை அல்லது வங்குறோத்திலிருந்து விடுவிக்கப்படாதவராக இருக்கின்றவருமான ஆளொருவராக, இருந்தால் ;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் ஏதேனும் தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஆளொருவராக இருந்தால்,

சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு தொடர்ந்திருப்பதற்கு தகமையற்றவராதல் வேண்டும்.

2. சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்பினால், பதவி துறப்பினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் அவர் முன்னரே பதவிவறிதாகியிருந்தாலன்றி, அவருடைய நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதி ஒன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் மீள்நியமனத்திற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

## *2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இலங்கை புடைவை 25 மற்றும் ஆடை நிறுவகச் சட்டம்*

*3.* சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு அனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் ஏதேனும் காலத்தில் தமது பதவியைத் துறக்கலாம் என்பதுடன் அத்தகைய பதவிதுறத்தலானது அக்குழுவும் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மீது பயனுறுதலும் வேண்டும்.

*4.* அமைச்சர், அவர் அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதினால், குறித்துரைக்கப்பட்ட காரணங்களுக்காக, சபையின் எவரேனும் நியமிக்கப் பட்ட உறுப்பினரை பதவியிலிருந்து அகற்றலாம்.

*5.* ஏதேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறப்பு, பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் பட்சத்தில், அமைச்சர் 3ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறொரு ஆளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆளொருவர், எவ்வுறுப் பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

*6.* சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக அவருடைய பதவிக்குரிய கடமைகளை தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருப்பின் அமைச்சர், 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாட்டைக் கருத்திற்கொண்டு அவருடைய இடத்தில் செயலாற்றுவதற்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்க லாம்.

*7.* சபையின் உறுப்பினர்களிடையே வெற்றிடம் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மாத்திரம் சபையினது செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்ற தாதலாகாது.

*8.* சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியம், நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

*9.* (1) தவிசாளர், சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும் என்பதுடன் தவிசாளர் சமுகமளிக்காதவிடத்தில் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள், அவர்களில் இருந்து ஒருவரை அத்தகைய கூட்டத்தை தலைமைதாங்குவதற்குத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்தில் தீர்மானத்திற்கான எல்லா வினாக்களும் உறுப்பினர்களின் பெரும்பான்மையான வாக்கினால் தீர்மானிக்கப்படல் வேண்டும் என்பதுடன், சபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவேண்டிய ஏதேனும் கருமத்தில் சமமான வாக்குகள் உள்ளவிடத்து, அத்தகைய கூட்டத் தில் தலைமைவகிக்கின்ற உறுப்பினர் தனது வாக்கிற்கு மேலதிகமாக தீர்மானிக்கின்ற வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்தாதல் வேண்டும்.

(4) இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய சபையானது, அதன் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகளை ஒழுங்கு படுத்துவதற்கு அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்து வதற்கும் விதிகளை ஆக்கலாம்.

10. (1) நிறுவகத்தின் இலச்சினை சபையில் தீர்மானிக்கக்கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் இலச்சினையானது –

(அ) சபை காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்த கைய ஆளின் அல்லது ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண் டும் ;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகையமுறை யில் மாற்றப்படலாம் ; என்பதுடன்

(இ) சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் இருவரும் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாள மாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

(3) சபையானது, எந்தச் சாதனங்கள் அல்லது ஆவணங்களுக்கு நிறுவகத்தின் இலச்சினையானது பொறிக்கப்படுகின்றதோ அச்சாதனங் கள் அல்லது ஆவணங்களின் பதிவேடொன்றைப் பேணச்செய்வித்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்